4th August 1966]

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) ஆம்.

(இ) தர்மபுரி, தஞ்சாவூர், இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

திரு. கரு. சீமைச்சாமி : இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கை, மானாமதுரை தாலுகாக்களில் வரிவஜா செய்யப்பட்டாலும் அங்கே இருக்கின்ற அதிகாரிகள் பழைய பாக்கிகளை வசூல் செய்கிறார்கள். இந்த ஆண்டு பஞ்சம் ஏற்பட்டிருக்கிறபோது பழைய பாக்கிகளை வசூலிப்பதற்கு கெடுபிடி, ஜப்தி போன்றவற்றையெல்லாம் செய்கிறார்கள். ஆகவே பழைய பாக்கிகளை இப்பொழுது வசூல் செய்யாமல் இருப்பதற்கு முயற்சியெடுப்பார்களா ?

MR. SPEAKER : The hon. Member may put a separate question regarding arrears.

Groundnut crop

* 82 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state :

(*a*) whether it is a fact that groundnut crop in Madurai and Ramanathapuram districts have been badly affected by drought conditions ; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) In Ramanathapuram district, in Fasli 1375, the groundnut crops were badly affected only in Srivilliputhur taluk and Manamadurai Sub-taluk due to drought conditions. The yield was 2 annas and below.

In Madurai district also the groundnut crops were affected due to drought conditions. The yield was 20 per cent to 50 per cent of the normal yield in most parts of the district except in Madurai Division, where the yield was 50 per cent to 70 per cent.

திரு. வை. சங்கரன் : இம்மாதிரி விளைச்சல் இல்லாத நிலையில் சாகுபடி செய்ய முடியாத விவசாயிகளுக்கு என்ன நிவாரணம் அளிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இது எல்லாம் புன்செய் சாகுபடி அதற்கு போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர் பிரகாரம் என்ன என்ன கொடுக்க முடியுமோ அதைக் கொடுப்பார்கள்.

கிராம ரிக்கார்டுகளைக் கட்டுவதற்கு கித்தான்

** 83 கேள்வி—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் உணவு அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) ஆண்டுதோறும் நடந்து வருகின்ற ஜமாபந்திக் கூட்டத்தின்போது மட்டும் கிராம ரிக்கார்டுகள் பூராவும் கித்தான் சாக்கில் கட்டி தூக்கிக்கொண்டு வருவதற்கு விசேஷ காரணங்கள் ஏதேனும் உண்டா ?

(இ) இல்லை என்றால், தாலூக்கா அலுவலகங்களிலும், கலெக்டர் அலுவலகங்களிலும், இதேமாதிரி கித்தானைப் பயன் படுத்தும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) இல்லை.

(இ) வினா எழாது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, குறிப்பாக நம் தமிழகத்தில் இது இன்னும் தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கிறது. ஜமாபந்தி ரிக்கார்டுகளையெல்லாம் கித்தானிலே கட்டிக்கொண்டு போகிறார்கள். குறிப்பாக மதுரையிலே இம் மாதிரிச் செய்கிறார்கள். ஆனால் மற்ற மாவட்டங்களிலே இந்த நிலைமையைக் காணோம். தென் ஆர்க்காடு ஜில்லாவிலே கயிற்றிலே கட்டிக் கொண்டு போகிறார்கள். கித்தானிலே கட்டிக்கொண்டு போனால் தீட்டு ஒட்டாமல் இருக்கும், துணியிலே கட்டிக்கொண்டு போனால் தீட்டு ஒட்டிக்கொள்ளும் என்று அங்கேயுள்ள பிரமுகர்கள் எல்லாம் சொன்னார்கள். இது எந்த அளவுக்கு உண்மை என்பது சந்தேகத்திற்கு இடமாக இருக்கிறது. அதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் தான் நான் இல்லை என்று சொன்னேன்.

திரு. அ. ரா. ராமசாமி : இந்த ஜமாபந்தி முறையையே எடுத்து விட்டு தணிக்கை போன்ற முறையை ஏற்படுத்துவார்களா ?

கனம் சபாநாயகர் : இந்தக் கேள்வி கித்தானைப்பற்றியதுதான். The hon. Member is raising the question of "Jamabandi" itself.

ஊமங்கலம் கிராம மணியம் தற்காலிக வேலை நீக்கம்

*84 **கேள்வி—திரு. நா. இராசாங்கம் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், விருத்தாசலம் வட்டம் ஊமங்கலம் கிராம இசும் மணியம், நிலவரியிலும், பஞ்சாயத்து வரியிலும் நிலுவை நின்ற, மற்றும் கையாடல் காரணங்களுக்காக சஸ்பெண்ட் செய்யப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அவர் மீது அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன ?

(உ) அவர் மீண்டும் வேலையில் சேர்க்கப்பட்டிருக்கிறாரா ?

(எ) ஆம் எனில், அவரிடமிருந்து, அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய தொகை முழுவதும் வசூலாகி விட்டதா. எவ்வளவு ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) நிலவரி, மற்றும் கடன் நிலுவைகளை விறுவிறுப்பாக வசூல் செய்யாதது காரணமாக இசும் மணியம் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டார். கையாடல் காரணங்களுக்காக அல்ல.